ISSN - 2235-9796


20 பக்கங்கள் : விலை 30/-

# Valai வலை

சமகால பொது அறிவுத் தொகுப்பு

உண்மை
நேர்மை
நம்பிக்கையே
உயர்ச்சி தரும்

சிலந்தி - 05 | யூலை - 2016 | இழை - 58



வங்கியின் சிகரம் 14



புதிய பிரதமர் 10



சாதனை வீரன் 11

**வாசக நெஞ்சங்களுக்கு...!**

வலையின் இதழ் 58 ஆவது இழையில் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எப்படி சௌக்கியமாக இருக்கிறீர்களா?

அனைவருமே வாழ்க்கையில் இன்பம், துன்பம், ஏற்றம் அல்லது தாழ்வு என்பவற்றை எதிர்கொள்ள வேண்டும். ஆனால் சிலருக்கு இந்த துன்பம் சார்ந்த உணர்வுகள் தொடர்ச்சியானதாக இருக்கலாம்.

எனவே மன அழுத்தம் என்பது உற்சாகமற்ற நிலை என்பதனை விட அதிக பாதிப்பை தரக்கூடியது. அது ஒரு நோய். நபர் ஒருவரின் உடல் மற்றும் உள நலனில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய தீவிரமான நோயாகும்.

மன அழுத்தம் என்பது மிகவும் முக்கியமான உடல் நலக் கோளாறு எனவும், கவனிக்காது விடும்பட்சத்தில் அது தற்கொலைக்கு வழியாக அமைந்து விடும் எனவும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிக்கின்றது.

இன்று எமது சமூகத்தில் பலர் மன அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ள போதிலும், தமக்கு அல்லது தமது அன்புக்குரியவர்களுக்கு அந்த நோய்த் தாக்கம் உண்டு என்பதனை அறிய முற்படுவதில்லை.

எமது வாழ்வில் மன அழுத்தத்தை தூண்டும் மிகவும் மோசமான வாழ்க்கை நிகழ்வுகளை எதிர்கொண்டவர்களாக அல்லது தனிப்பட்ட காரணிகளை அனுபவித்தவர்களாக நீங்களோ அல்லது உங்களது அன்புக்குரியவர்களோ இருப்பின் அவர்களது மனநிலை மற்றும் நடத்தையைக் கண்காணிப்பது மிகவும் முக்கியமானதாகும். இதன் மூலம் நாம் அவர்களுக்கு உதவ முடியுமல்லவா...?


இந்த இதழ் தொடர்ந்து வெளிவருவது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. எனவே உங்கள் ஆதரவில் எனது பணி தொடரும்...

- 'வலை' வீசல் தொடரும்...

நன்றி.

சி.என்.எச்.சாள்ஸ்
தொகுப்பாசிரியர்

## இம்மாத சர்வதேச தினங்கள்...




- ✧ யூலை - 01 - உலக மருத்துவர்கள் தினம்
- ✧ யூலை - 01 - உலக கூட்டுறவுத் தினம்
- ✧ யூலை - 08 - உலக கூட்டுறவாளர் தினம்
- ✧ யூலை - 08 - உலக எழுத்தாளர் தினம்
- ✧ யூலை - 11 - உலக சனத்தொகை தினம்
- ✧ யூலை - 17 - உலக வறுமை ஒழிப்புத் தினம்
- ✧ யூலை - 20 - உலக சதுரங்க தினம்
- ✧ யூலை - 22 - உலக அண்ணளவு தினம்
- ✧ யூலை - 23 - உலக மனவழுத்த தினம்
- ✧ யூலை - 25 - உலக குத்ஸ் தினம்
- ✧ யூலை - 28 - உலக அகதிகள் தினம்
- ✧ யூலை - 28 - உலக கல்லீரல் தினம்
- ✧ யூலை - 30 - உலக நண்பர்கள் தினம்

## இலங்கை பற்றிய இம்மாத வலை வீசலில்...

❒ இந்தியாவின் தென்மாவட்டங்களில் இருந்து வள்ளங்கள் மூலம் சட்டவிரோதமாக அவுஸ்ரேலியா செல்லும் இலங்கை தமிழ் அகதிகளைக் கண்காணிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையின் பெயர் என்ன?
“ஆப்ரேஷன் சாத்ராக்”

❒ கடந்த (02.07.2016) அன்று உலகம் முழுவதும் எத்தனையாவது சர்வதேச கூட்டுறவு தினம் கொண்டாடப்பட்டது?
94 ஆவது

❒ அண்மையில் (10.07.2016) ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவால் இலங்கையில் எப்பகுதியில் விமான நிலையம் திறந்து வைக்கப்பட்டது?
மட்டக்களப்பு

❒ வடமாகாண கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சேமிப்பு மாதமாக எந்த மாதம் அறிவிக்கப்பட்டுள்ளது?
2016 யூலை மாதம்

❒ மக்கள் வங்கி தனது எத்தனையாவது ஆண்டு நிறைவினை (01.07.2016) அண்மையில் கொண்டாடியது?
**55 ஆவது**

❒ அண்மையில் (12.07.2016) இலங்கைக்கு வருகை தந்த ஈரானிய ஆன்மீகத் தலைவர் யார்?
**ஆயத் துல்லா ஹசன் கொமெய்னி**

❒ ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா வெளியேறியமை மற்றும் சென்மதி நிலையில் ஏற்பட்ட அதிகரிப்பினால் தோன்றியிருக்கும் அழுத்தம் என்பன இலங்கையின் பொருளாதாரத்தை எதிர்மறை நிலைக்கு கொண்டு செல்வதாக எந்த நிறுவனம் அறிவித்தது?
**மூடி முதலீட்டு நிறுவனம்**

❒ அரசாங்கத்தினால் எத்தனை அத்தியாவசியப் பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டது? 16
இதில் - கோழி இறைச்சி, வெள்ளைச் சீனி, பால்மா, சஸ்டோஜன், சிவப்பு பருப்பு, மா, கட்டாக்கருவாடு, நெத்தலி, உருளைக்கிழங்கு, சாணக்கருவாடு, கடலை, பெரிய வெங்காயம், மாசிக்கருவாடு, ரின் மீன், செத்தல் மிளகாய், பச்சைக்கடலை.

❒ பாடசாலைகளுக்கு வழங்கவென திருவள்ளுவர் சிலைகள் இலங்கை அரசாங்கத்துக்கு எந்த அமைப்பினால் வழங்கப்பட்டன?
**தமிழ்நாடு வி.ஜி.பி. உலக தமிழ் சங்கம்**

❒ அண்மையில் (22.07.2016) இலங்கையின் சுற்றாடல் தொடர்பான நூலகம் எங்கே திறந்து வைக்கப்பட்டுள்ளது?
**புத்தளம் (புத்தளம் கல்வி வலயத்திற்குட்பட்ட மதுரங்குளி சிங்கள மகா வித்தியாலயத்தில்)**

❒ விபத்துக்கள் மற்றும் கடுமையான பாதிப்புக்களின் போது நோயாளிகளை உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கான அவசர இலவச அம்பியூலன்ஸ் சேவை இலங்கையில் முதல் தடவையாக (28.07.2016) நடைமுறைக்கு வந்துள்ளது. அந்த அம்பியூலன்ஸ் சேவையின் தொலைபேசி இலக்கம் என்ன? 1990
மேற்படி சேவைக்காக இந்திய அரசு 108 அம்பியூலன்சுகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

- அண்மையில் (11.07.2016) இலங்கையின் எப்பகுதியை மினி சூறாவளி தாக்கிச் சேதத்தை ஏற்படுத்தியது?
  **நாத்தாண்டி மாரவில் பகுதியில்**

- இலங்கை மற்றும் அமெரிக்க ஆகிய இருநாடுகளுக்கான பாதுகாப்பு உறவினைப் பலப்படுத்தும் வகையிலும், இருநாட்டு கடற்படை பயிற்சிகளை மேற்கொள்ளும் வகையிலும் இலங்கையில் அண்மையில் வருகை தந்த (21.07.2016) அமெரிக்க போர்க்கப்பல் எது?
  **யு.எஸ்.எஸ். நியூ ஓர்லீன்ஸ்**
  **இக்கப்பலின் தளபதி : மேஜர் ஜோண் ஆர்னோல்ட்**

- ஜப்பானியக் கடற்படையின் 2 போர்க்கப்பல்கள் நல்லெண்ண விஜயமாக அண்மையில் கொழும்பு வந்து சென்றன. அக்கப்பல்கள் எவை?
  **இனாசுமா, சுசுற்சுகி**

- இலங்கை வந்த ரஷ்யாவின் கடற்படைக் கப்பல் எது?
  **இகோர் பெலோசோவ்**

- அண்மையில் இலங்கை வந்து சென்ற கனடாவின் வெளிவிவகார அமைச்சர் யார்?
  **ஸ்டீபன் டியோன்**
  இதன்போது, "தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டு கருத்திட்டம்" என்ற கனடா இலங்கை புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

- ரஜனிக்காந் நடித்து வெளிவந்துள்ள கபாலி திரைப்படத்திற்கு விமானத்தில் விளம்பரப்படுத்தப்பட்டது. அந்த விமானம் எது?
  **ஏயார் ஏசியா**

- மாணிக்கக்கல் தொடர்பில் இலங்கை எந்த நாட்டுடன் அண்மையில் ஒப்பந்தம் செய்தது?
  **சீனா**

- மதுபானம் அதிகம் பயன்படுத்துகின்ற நாடுகளின் வரிசையில் முன்னணியில் திகழும் நாடு எது?
  **இலங்கை**

//////////////////////////////////////////////////////////////////////

## இலங்கையில் இன்று இவர்கள்...

- நீர்வள மற்றும் மீன்பிடித்துறை அமைச்சர் யார்?
  **மஹிந்த அமரவீர**

- இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் யார்?
  **அதுல் கேஷாப்**

- தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் யார்?
  **மனோகணேசன்**

- பன்னாட்டு இராணுவத்துக்கு நவீன போர்த்தளபாடங்களை வழங்கவுள்ள நாடு எது?
  **ரஷ்யா**

## உலகை நோக்கிய இம்மாத வலை வீசலில்...

- ஐக்கிய இராச்சியத்தில் நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பில் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேற வேண்டுமென எத்தனை வீதமானோர் வாக்களித்தனர்.
  **52 வீதம்**
  தொடர்ந்து பிரிட்டன் தொடர்ந்து அங்கத்துவம் வகிக்க வேண்டுமென்று 48 வீதமானோர் வாக்களித்துள்ளனர்.

- ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறியதால் அந்த ஒன்றியம் எடுத்த முதல் நடவடிக்கை என்ன?
  **அலுவல் மொழியாகவிருந்து ஆங்கிலத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.**

- டிஜிட்டல் தொழில்நுட்பத்தால் உலக அளவில் ஏற்படும் பெரும் மாற்றத்தை கணித்தவரும், தொழில்துறை வளர்ச்சிக்கு பிந்தைய காலத்தின் குருவாகக் கருதப்படுபவர் அண்மையில் (29.06.2016) லொஸ் ஏஞ்சலில் காலமானார். அவர் யார்?
  **அல்வின் டொப்ளர் (வயது-87)**
  இவர் “எதிர்கால அதிர்ச்சி” (Shock Future) என்ற நூலை தனது மனைவியுடன் இணைந்து வெளியிட்டார்.

◇ சித்தார்த்த கௌதம புத்தருடையது என நம்பப்படும் மண்டையோட்டு எலும்பு அண்மையில் எங்கே கண்டு பிடிக்கப்பட்டது?
**சீனாவின் நந்ஜின் நகரில்**

◇ அண்மையில் தாய்வான் எந்த நாட்டின் மீது தவறுதலாக ஏவுகணை செலுத்தியது?
**சீனா**
சீனா இதனை அபாயகரமான தவறு என எச்சரித்துள்ளது.

◇ நாஸா விண்வெளி ஆய்வு மையம் அனுப்பிய விண்கலம் வியாழன் கிரகத்தின் சுற்றுவட்டப் பாதையில் அண்மையில் (05.07.2016) வெற்றிகரமாக இணைந்தது. அந்த விண்கலத்தின் பெயர் என்ன?
**ஜுனோ**

◇ ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா வெளியேறியதைத் தொடர்ந்து ஆசிய சந்தையில் ஸ்ரேலிங் பவுணில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இது எத்தனை வருடங்களின் பின்னர் நடந்துள்ளது?
**31 வருடங்களின் பின்னர்**

◇ மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டி வடகொரியா தலைவர் கிம் ஜொங் உன் மீது முதல் முறை தடை வித்த நாடு எது?
**அமெரிக்கா**
இதற்கு முன்னர் அமெரிக்கா பஷர் அல் அஸாத் மற்றும் லிபியாவின் முன்னாள் தலைவர் முகம்மர் கடாபி ஆகிய அரச தலைவர்களுக்கு எதிராகத் தடைகளை விதித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

◇ மூன்று பன்னாட்டு விண்வெளி வீரர்களையும் ஏற்றிக்கொண்டு ரஷ்யாவின் ரொக்கெட் விண்ணுக்கு ஏவப்பட்டது. (07.07.2016) அந்த விண்கலம் எது? அதில் பயணம் செய்த வீரர்கள் யார்?
“சொயுங்”
- கேட் ருபின்ஸ் - அமெரிக்கா (நாஸா)
- அனடோலி இவானிஷின் - ரஷ்யா
- டகுயா ஒனிஷி - ஜப்பான்.

◇ மூன்று சூரியன்களைக் கொண்ட வேற்றுக்கிரகம் வானியலாளர்களால் அண் மையில் அவதானிக்கப்பட்டது. அக்கிரகத்தின் பெயர் என்ன?
**“எச்.டி - 131399 ஏ.பி”**

◇ அருகிவரும் பறவை இனங்கள் சிரியாவுக்கு புலம்பெயர்வதைத் தடுக்க எந்த நாட்டு சுற்றுச்சூழல் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்?
**துருக்கி**

◇ தென்சீனக் கடல் மீது சீனா கோரும் உரிமைக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடுத்த நாடு எது?
**பிலிப்பைன்ஸ்**
பிலிப்பைன்சுக்கு சாதகமாக வழக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

◇ 2017 ஆம் ஆண்டு அரியணையிலிருந்து விலகுவதற்கு முடிவெடுத்துள்ள ஜப்பான் பேரரசர் யார்?
**அகிஹிடோ**

◇ அமெரிக்காவின் வடக்கு டெக்சாஸ் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக நியமனம் பெற்ற இந்தியத் தமிழர் யார்?
**பேராசிரியர் டாக்டர் கின்சுக்**

◇ சூரியமண்டலத்துக்கு வெளியில் பூமியைப் போன்ற நான்கு பாறை உலகங்கள் உட்பட எத்தனை புதிய கிரகங்களைக் கண்டுபிடித்துள்ளதாக சர்வதேச ஆய்வுக்குழு அறிவித்துள்ளது? **104**

◇ 8 தொன்கள் கொண்ட சீனாவின் செயற்கைக் கோள் விளிமண்டலத்தில் இருந்து தப்பி ஆபாயகரமான முறையில் பூமியைத் தாக்கும் என எச்சரிக்கப் பட்டுள்ளது. அந்த செயற்கைக் கோளின் பெயர் என்ன?
**டியான்கொங் - 1**

◇ அண்மையில் (24.07.2016) தனது பதவியை இராஜினாமாச் செய்த நேபாள பிரதமர் யார்? **கே.பீ.ஷர்மா**

◇ ஆளும் கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் இணைந்து எந்த நாட்டில் பாரிய ஜனநாயகப் பேரணியை அண்மையில் நடத்தினர்? **துருக்கியில்**
துருக்கியில் இராணுவ சதிப்புரட்சியைக் கண்டித்தே மேற்படி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

◇ பிரபல இணையத்தள தேடல் பொறி நிறுவனமான யாகூவை (Yahoo) 4.8 பில்லியன் டொலருக்கு வாங்கியுள்ள பிரபல நிறுவனம் எது?
**வெரிசான்**

////////////////////////////////////////////////////////////////////////////////

◇ உலகின் மிகவும் உயரமான ஆண்கள் எந்த நாட்டினர் என புதிய ஆய்வு கூறுகின்றது?
நெதர்லாந்து

◇ அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் அதிகாரபூர்வ பெண் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளவர் யார்?
**ஹிலாறி கிளிண்டன்**
இதேவேளை, இதன் மூலம் அமெரிக்காவின் ஜனாதிபதி பதவிக்கு எந்தவொரு பிரதான கட்சியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கும் முதல் பெண்மணியாக ஹிலாறி வரலாற்றில் இடம்பிடித்துள்ளார்.

◇ **டென்மார்க் நாட்டின் முதலாவது விமானியாகும் (துணை விமானி) இலங்கைத் தமிழ்ப் பெண் யார்?**
அர்ச்சனா செல்லத்துரை (வல்வெட்டித்துறை)
இதேவேளை, டென்மார்க்கில் ஆசிரியர் பயிற்சி முடித்து டேனிஸ் மொழி ஆசிரியையாகவும் பணியாற்றினார். விஜய் ரீவி லண்டன் அரேனாவில் நடத்திய மாபெரும் சூப்பர் சிங்கர் பாடல் நிகழ்ச்சியில் டென்மார்க்கில் இருந்து முக்கிய பாடகியாக பாடியுள்ளார்,
இதுபோல மலேசியாவில் யுவன் ஷங்கர் ராஜா இசை நிகழ்விலும் பாடியுள் ளார், இவருடைய பாடல்கள் பல இணையத் தளங்களில் வெளியாகியுள்ளன.

◇ அண்மையில் (08.08.2016) சீனாவைத் தாக்கிய சூறாவளியின் பெயர் என்ன?
நெபார்தக்
6 பேருக்கு மேல் பலி, 438,00 இற்கும் அதிகமானோர் இடம்பெயர்வு

◇ பிரித்தானியாவில் புகழ்பெற்ற த பாங்கர் சஞ்சிகையின் தரப்படுத்தலில் உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளில் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்ட இலங்கையின் வங்கி எது?
**இலங்கை வங்கி**
இதன் மூலம் இந்நாட்டில் முதன் வங்கி என்னும் பெருமையை இலங்கை வங்கி ஸ்திரப்படுத்திக் கொண்டுள்ளது.

◇ அரவாணிகள் இராணுவத்தில் சேர்வதற்கு அனுமதி வழங்கியுள்ள நாடு எது? **அமெரிக்கா**

◇ எந்த நாட்டின் மீது ரஷ்யா சுற்றுலாத்தடை விதித்தது?
**துருக்கி**

◇ மிகப்பெரிய இராணுவப் புரட்சி மக்களின் ஆதரவுடன் முறியடிக்கப்பட்டது எந்த நாட்டில்?
**துருக்கி**
மேற்படி இராணுவப் புரட்சியில் 200 பேர் வரையில் சாவடைந்தனர். 1000 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

◇ அண்மையில் 130 ஊடக நிறுவனங்களை முடக்கியுள்ள நாடு எது?
**துருக்கி**
அண்மையில் துருக்கி அரசு எதிர்நோக்கிய ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சியின் எதிரொலியாக மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக் கது.

◇ 26 ஆவது முறையாக இவ்வாண்டும் (2016) உலகக் கடிகாரங்களில் எத்தனை வினாடி கூடுதலாகக் சேர்க்கப்படவுள்ளது?
**ஒரு வினாடி**

◇ அண்மையில் (07.07.2016) தாய்வானைத் தாக்கிய கடும் சூறாவளியின் பெயர் என்ன?
**செப்பார்ரெக்**

◇ பெண்கள் கருக்கலைப்பில் ஈடுபட்டால் 50 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்படும் எனச் சட்டம் இயற்றியுள்ள நாடு எது?
**எல்சல்வடோர்**

◇ 180 நாடுகளை உள்ளடக்கிய பூகோள சுற்றுச்சூழல் செயற்றிறன் சுட்டியில் இலங்கை எத்தனையாவது இடத்தில் உள்ளது?
**108 ஆவது**
இதேவேளை, பின்னலாந்து, ஐஸ்லாந்து, சுவீடன், டென்மார்க், சுலோவேனியா, ஸ்பெயின், போர்த்துக்கல், எஸ்தோனியா, மால்டா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் முறையே 10 இடங்களைப் பெற்றன.
இந்தியா 141 ஆவது இடத்திலும் உள்ளது.

◇ போசாக்கு குறைபாடு காரணமாக எந்த நாட்டில் 134 சிறுவர்கள் தினமும் இறப்பதாகக் கூறப்படுகிறது?
**நைஜீரியாவில்**
மேற்படி பகுதியில் 49 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் போசாக்கு குறைபாட்டால் பாதிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

◇ உலகில் முதன்முறையாக நீரினுள் மிதக்கும் பாலம் எந்த நாட்டில் நிர்மாணிக்கப் பட்டுள்ளது?
நோர்வேயில்

## உலகின் இன்றைய நிலையில் இவர்கள்...

◎ அமெரிக்காவின் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் தொடர்பான பிரதி இராஜாங்கச் செயலாளர் யார்?
டொம் மொனிநொஸ்கி

◎ பிரிட்டனின் புதிய பிரதமர் யார்? தெரேசா மே (தலைநகரம்:இலண்டன்)

◎ துருக்கி நாட்டின் ஜனாதிபதி யார்? எர்டோகன் (தலைநகரம்:அங்காரா)

◎ சிங்கப்பூர் நாட்டின் பிரதமர் யார்? **லீ சின் லூணு** (தலைநகரம்:சிங்கப்பூர்)

◎ நேபாளத்தின் 39 ஆவது புதிய பிரதமர் யார்? (தலைநகரம்:கத்மந்து)
பிரசந்தா

## விளையாட்டுப் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

⊙ யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாகாண மட்ட தடகளப் போட்டியில் மூன்று நாள்களில் மூன்று நிகழ்வுகளில் தங்கம் வென்று சாதனை படைத்த பாட சாலை மாணவி யார்?
**பி.பிரியங்கா - (தச்சணாமடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை)**

⊙ வரி மோசடிக் குற்றச்சாட்டில் பேரில் உதைபந்தாட்ட வீரர் லயனல் மெர்ஸிக்கு எத்தனை மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 21

⊙ அதிக உயரத்தில் இருந்து வந்த பந்தை பிடியெடுத்து புதிய கின்னஸ் சாதனை படைத்த வீரர் யார்?
**நஸார் ஹுஸைன் (இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர்)**

⊙ பிரான்ஸ் நாட்டில் நடைபெற்ற 15ஆவது ஐரோப்பிய கோப்பை கால்பந்து தொடரில் முதன் முறையாக சம்பியன் பட்டம் வென்ற அணி எது?
போர்த்துக்கல்
பிரான்ஸ் அணியை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.

⊙ மகளிர் 110 மீற்றர் தடை தாண்டும் போட்டியில் பந்தய இலக்கை 12.20 வினாடிகளில் கடந்து உலக சாதனை படைத்த அமெரிகக வீராங்கனை யார்?
**கேந்திரா ஹரிசன் (வயது-28)**

⊙ சர்வதேச கிரிக்கெட் சபையின் அதியுயர் விருதாகக் கருதப்படும் "வாழ் நாள் சாதனையாளர் விருது" (ICC Cricket Hall of Fame) யாருக்கு வழங் கப்படவுள்ளது?
**முத்தையா முரளிதரன்** (இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழல் பந்து வீச்சாளர்)
இதன் மூலம் குறித்த விருதைப் பெறும் முதலாவது இலங்கையர் என்ற பெருமையை அவர் பெறுகிறார்.
இதேவேளை, முன்னார் அவுஸ்ரேலிய மகளிர் அணித்தலைவியான கரீன் ரோல்டன், அவ்வணியின் சக வீராங்கனை ஆதர் மொரிஸ் மற்றும் இங்கி லாந்து அணி ஜோர்ச் வோக்மன் ஆகியோரும் இந்த விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
முத்தையா முரளிதரன் சர்வதேச டெஸ்டில் 133 போட்டிகளில் விளையாடி 800 விக்கெட்டுக்களையும், சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் 350 போட்டிகளில் விளையாடி 534 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது.

⊙ இலங்கையில் தியகமவில் நடைபெற்ற 94 ஆவது தேசிய மெய்வல்லுநர் போட்டி நிறைவில் சிறந்த வீரராக அறிவிக்கப்பட்ட வீரர் யார்?
**மஞ்சுள குமார**

⊙ இந்திய டெஸ்ட் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியில் இருந்து நீக்கப்பட்டதன் பேரில் தான் ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ள வீரர் யார்?
**ஜெரோம் டெய்லர்**

⊙ ஐ.சி.சி. டெஸ்ட் அரச வரிசைப் பட்டியலில் இலங்கை எத்தனையாவது இடத்தில் உள்ளது?
**7 ஆவது**
இந்தப் பட்டியல் அவுஸ்ரேலியா அணி தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. இரண்டாவது - இந்தியா, மூன்றாவது பாகிஸ்தான்

⊙ ரியோ ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் பங்குபற்றவுள்ள இலங்கை அணிக்கு அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ள வீரர் யார்?
**இந்திரஜித் குரே**

⊙ ஆர்ஜென்ரீனா உதைபந்தாட்ட அணியின் தலைவர் மெர்ஸி ஓய்வு முடிவை அறிவித்ததையடுத்து அவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் அவரது உயரத்தையொத்த வெண்கலச்சிலை எங்கே அவரது ரசிகர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது?
**ஆர்ஜென்ரினாவில்**

⊙ கடந்த 82 ஆண்டுகளில் அதிக வயதில் டெஸ்ட் சதமடித்த வீரர் என்ற பெருமையைப் படைத்த வீரர் யார்?
**மிஸ்பா உல் ஹக் (வயது-42), பாகிஸ்தான்**

⊙ மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபையின் வருடாந்த விருது வழங்கும் விழா அண்மையில் நடைபெற்றது. இந்த விழாவில் சிறந்த வீரர், வீராங்கனை யாகத் அறிவிக்கப்பட்டவர்கள் யார்?
**மார்லன் சாமுவேல்ஸ் - வீரர்**
**ஸ்டெப்னி ரெய்லர் - வீராங்கனை**

⊙ போர்த்துக்கள் நாட்டிலுள்ள பஞ்சால் நகரிலுள்ள விமான நிலையத்துக்கு உதைபந்தாட்ட வீரர் ஒருவரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அந்த வீரர் யார்?
**கிறிஸ்டியானோ ரொனால்டோ**
இதேவேளை, போர்த்துக்கல் விஞ்ஞானிகள் கண்டுபிடித்த நட்சத்திரத்திற்கும் இவரின் பெயர் சூட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் போர்த்துக்கல் பல்கலைக்கழகத்தில் இவரின் வாழ்க்கை வரலாறு பாட மாகவும் கற்பிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## அயல்நாட்டுப் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

✧ முற்று முழுதாக இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இலகுரக போர் விமானங்கள் இரண்டு அண்மையில் (01.07.2016) இந்திய விமானப்படையில் இணைக் கப்பட்டன. அந்த விமானத்தின் பெயர் என்ன?
**தேஜஸ்**

✧ கின்னஸ் சாதனை ஏட்டில் உலகில் மிகவும் வயதான யானை எந்த நாட்டில் உள்ளது? **இந்தியாவில் - தாட்சாயினி (வயது-86)**

✧ தீவிர நிலநடுக்கம் ஏற்படும் பட்டியலில் இந்தியாவின் எப்பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன? **டில்லி, என்சிஆர்**

✧ சீனாவுக்குப் போட்டியாக 26,818 கோடி முதலீட்டில் புதிய துறைமுகத்தை அமைக்கவுள்ள நாடு எது? **இந்தியா**

✧ தலைக்கவசம் அணியாவிட்டால் எரிபொருள் நிலையங்களில் பெற்றோல் நிரப்ப முடியாது என அறிவித்துள்ள அரசு எது?
**கேரள அரசு**

✧ லீடிங் ஜுவலர்ஸ் ஒப் தி வேர்ல்ட் என்ற உலக தங்க நகை கூட்டமைப்பு தங்கத்திற்கு மாற்றாக புதிய மதிப்பு மிக்க உலோகத்தை இந்தியாவில் அண்மையில் அறிமுகம் செய்துள்ளது. அந்த உலோகம் எது?
**"லூமினக்ஸ் யூனோ"**
தங்கம், பிளாட்டினம், பலேடியம், வெள்ளி ஆகிய உலோகங்களின் கலவையில் இருந்து லூமினக்ஸ் யூனோ உலோகம் தயாரிக்கப்படுகிறது.

✧ அண்மையில் காணாமல் போன (22.07.2016) இந்திய விமானப் படைக்குச் சொந்தமான விமானம் எது?
**ஏ.என்-32 (29 பேர்)**

## விருதுகள் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

✧ சிங்கப்பூரில் நடைபெற்ற சைமா விருது வழங்கும் விழாவில் விருது பெற்றுக்கொண்ட நடிக, நடிகையர் யார்?
**- விக்ரம் - படம் : "ஐ"**
**- நயன்தாரா - படம் : நானும் ரௌடிதான்**

✧ சந்தைப்படுத்தலில் மக்கள் தலைவர்-2016 விருதுபெற்ற மலிபன் பிஸ்கட்ஸ் மெனு∴பக்ஷரிங் நிறுவனத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவின் பிரதம நிறைவேற்று அதிகாரி யார்?
**ரவி ஜெயவர்த்தனா**

✧ சுவிற்சர்லாந்தில் (16.07.2016) இடம்பெற்ற சாதனைத் தமிழர் 2016 என்னும் விருது வழங்கல் விழாவில் ஒன்பது விருதுகளை வென்று சாதனை படைத்த திரைப்படம் எது?
**"உயிர்வரை இனித்தாய்"**
இலங்கை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஆசிரியர் கி.செல்லத்துரை அவர்கள் இயக்கி வெளியிட்ட திரைப்படம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

✧ த பாங்கர் சஞ்சிகை (The Banker - Top 1000) நடத்திய ஆய்வில் தொடர்ந்து ஆறாவது ஆண்டாகவும் சிறந்த வங்கியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள வங்கி எது? கொமர்ஷல் வங்கி

---

## ❒ மத்திய வங்கி ஆளுநர்

- *14 ஆவது ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசாமி*
- *பிறப்பு - 1950 ஏப்ரல் 3*
- *1973 இல் இலங்கை மத்திய வங்கியில் இணைவு. பொருளாதார ஆய்வு புள்ளிவிபரவியல் மற்றும் வங்கி கண்காணிப்பு பிரிவில் பணி*
- *பிரபல பொருளியல் நிபுனர்*
- *1971 - 1972 வரை கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தின் முதல் தர கிரிக்கெட் வீரர்.*
- *1974 இல் இலங்கை ரக்பி விளையாட்டுக் கழகத்தின் தலைவர்.*
- *நாட்டின் பிரபல பொருளியல் நிபுணர்*
- *கல்வி - கொழும்பு றோயல் கல்லூரி*
  *லண்டன் ஹரோ பாடசாலை*
- *இளமானிப்பட்டம் - லண்டன் கேம்பிரிஜ் பல்கலைக்கழகம்*
- *கலாநிதிப் பட்டம் - சசெக்ஸ் பல்கலைக்கழகம்*
- *1990 - 2008 வரை பொதுநலவாய செயலகத்தின் பொருளாதார விவகார பிரிவின் பணிப்பாளர் மற்றும் செயலாளர் நாயகத்தின் அலுவலக பிரதிப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.*

  *இதேவேளை, முன்னாள் ஆளுர் அர்ஜீன மகேந்திரன் மீது பிணை முறி வர்த்தகத்தில் மோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆதரவு அணியினராலும், சிவில் அமைப் புக்களாலும் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

## நான் கேட்டவை, அறிந்தவை, படித்தவை உங்களுக்காக...

⌖ கூட்டுறவு (தினம்) எப்போது உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது? 1923
கூட்டுறவு 2016 தொனிப்பொருள் : “எதிர்கால நிலை வேறு தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான சக்தி கூட்டுறவே” (Co operatives the power of act for a sustain able future)

⌖ “பிரிஎக்சிட்”
பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தில் தொடர்ந்து இருக்க வேண்டுமா என்ற கேள்வி வலுத்தபோது பிரிஎக்சிட் என்ற சொல் பிரபலமாகியது.
அதாவது பிரிட்டனின் வெளியேற்றம் என்பதை சுருக்கினால் ஆங்கிலத்தில் “பிரிஎக்சிட்” என்று வருகிறது.

# நுண்ணறிவு – IQ

01. ஒரு பாத்திரத்தில் உள்ள திரவம் ஒவ்வொரு நிமிடமும் இரட்டிப்பாகின்றது. அப்பாத்திரம் 60 நிமிடங்களில் நிரம்பியதாயின் அப்பாத்திரத்தின் கால்பகுதி எப்போது நிரம்பியிருக்கும்?
   1) 15 நிமிடங்களில் 2) 30 நிமிடங்களில்
   3) 45 நிமிடங்களில் 4) 58 நிமிடங்களில்

02. இரு கப்பல்கள் கடலில் எதிர்எதிர் திசையில் பயணிக்கின்றது. ஒரு சந்தர்ப் பத்தில் இரு கப்பல்களிலிருந்தும் பார்க்கும்போது கடலில் நாட்டப்பட்டுள்ள 150 மீற்றர் உயரமான கம்பம் ஒன்றின் உச்சியின் ஏற்றக்கோணம் 45 ஆக வும் இருக்கின்றது எனின் இருகப்பல்களுக்கும் இடையில் காணப்படும் தூரம் யாது?
   1) 150m 2) 200m 3) 300m 4) 250m

03. ஒருவர் உண்டியலில் பணத்தினைச் சேமித்து வந்தார். ஒருநாள் உண்டியலி லிருந்த பணத்தை எடுத்தபோது அதில் 480 ரூபா இருந்தது. அதில் ஒரு ரூபாய் நாணயக் குற்றிகளும், 5 ரூபாய் நாணயக் குற்றிகளும், 10 நாணயக் குற்றிககளும் சமனான எண்ணிக்கையில் இருந்ததாயின் உண்டியலில் இருந்த நாணயக் குற்றிகளின் எண்ணிக்கை யாது?
   1) 30 2) 90 3) 25 4) 75

04. சந்தியாவுக்கு பொருளொன்றை அழகுப்படுத்துவதற்கு 6 மணித்தியாலங்கள் தேவைப்படுகின்றது. பிரியாவிற்கு அதே பொருளினை அழகுபடுத்துவதற்கு 4 மணித்தியாலங்கள் தேவைப்படுகின்றது. இருவரும் சேர்ந்து அப்பொருளை அழகுபடுத்துவார்களாயின் தேவைப்படும் நேரம் யாது?
   1) 1.2 மணித்தியாலம் 2) 2.4 மணித்தியாலம்
   3) 5 மணித்தியாலம் 4) 4 மணித்தியாலம்

05. ஒரு உதைபந்தாட்டக் குழு தாம் விளையாடிய 25 போட்டிகளில் 60% வெற்றியை பதிவுசெய்தனர். பின்னர் அவர்கள் தொடர்ந்து விளையாடிய 3 போட்டிகளில் வெற்றியை பெற்றனர். அவர்கள் வெற்றியடைந்த போட்டி களின் ............ சதவீதமாக உயர்ந்தது.
   1) 75 2) 70 3) 72 4) 75

**06 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.**

விமலா, ராதா, ஆமினா என்போர் மூன்று பெண் எழுதுநர்கள். நிமல், நாதன் என்போர் இரண்டு ஆண் எழுதுநர்கள். மேலும் ஆமினா, நாதன் ஆகியோர் பயிலுநர்கள்.

இவர்களிடையே மூவரைக் கொண்ட சேவையாளர் நலன்புரிக் குழுவை அமைக்கவேண்டியுள்ளது. அதில் வேறு பெண் இல்லாமல் குழுவில் சேவையாற்றுவதற்கு ஆமினாவுக்கு விருப்பமில்லை. பயிலுநருடன் ஒரே குழுவில் சேவையாற்ற சிரேஷ்ட எழுதுநர் நிமலுக்கு விருப்பமில்லை.

**இத்தகவல்களைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க**

06. மேற்குறித்த தகவல்களுக்கு ஏற்ப குழு எத்தனை குழுக்கள் தேர்ந்தெடுக்கப்படலாம்?

1) 2 2) 3) 3) 4 4) 5

07. குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு எவருக்கு குறைந்தளவு சாத்தியக்கூறு உள்ளது?

1) ஆமினா 2) நிமல் 3) ராதா 4) நாதன்

08. குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு எவருக்கு உயர்ந்தளவு சாத்தியக்கூறு உள்ளது?

1) ஆமினா 2) ஆமினாவும், நாதனும்
3) ராதாவும், நாதனும் 4) விமலாவும், ராதாவும்

09. குறைந்த பட்சம் ஒரு பயிலுநரையேனும் உள்ளடக்கிய குழுவை எத்தனை விதங்களில் அமைக்கலாம்?

1) 1 2) 2 3) 3 4) 4

10. ஒன்றுக்கு மேற்பட்ட பயிலுநர்கள் இடம்பெறாதவாறு குழுவை எத்தனை விதங்களில் அமைக்கலாம்?

1) 1 2) 2 3) 3 4) 4

**11 தொடக்கம் 16 வரையான வினாக்களில் தரப்பட்ட நான்கு கூற்றுக்களில் மூன்று கூற்றுக்கள் குறித்துரைத்த உண்மைகளாகவும், ஒன்று அபிப்பிராயமாகவும் இருக்கும். அபிப்பிராயக் கூற்றுக்களைத் தெரிவுசெய்க.**

11. 1) சோறு எந்நேரத்திலும் உண்ணத்தக்க உணவாகும்.
2) சோறு மாப்பொருள் உள்ள உணவாகும்.
3) சோறு பல ஆசிய நாடுகளில் முக்கிய உணவாகும்.
4) சோறு இலங்கையின் பிரதான உணவாகும்.

12. 1) தேநீர் ஓர் ஊக்கற் பானமாகும்.
2) இலங்கையில் தேயிலை செழிப்பாக வளருகின்றது.
3) சீனி சேர்க்கப்படாதபோது தேநீர் சுவையயான பானமாகும்.
4) இலங்கையில் தேயிலைச் செய்கைக்குப் பிரித்தானியர் முன்னோடிகளாவர்.

13. 1) தென்னை இலங்கையின் பாரம்பரியப் பயிராகும்.
2) தேங்காய் ஏற்றுமதிமூலம் இலங்கைக்கு வருமானம் கிடைக்கின்றது.
3) தேங்காய்ப் பூவினைக் கொண்டு தயாரிக்கப்பட்ட சம்பலை எல்லோரும் விரும்புவர்.
4) தென்னை குருநாகல் பிரதேசத்தில் செழித்து வளருகின்றது.

14. 1) நெல் இலங்கையின் பிரதான பயிராகும்.
2) இலங்கையின் எல்லா இடங்களிலும் நெற்செய்கை நடைபெறுகின்றது.
3) நெற்செய்கை ஆதிகாலத்திலிருந்தே நடைபெற்று வருகின்றது.
4) நெற்செய்கையிலிருந்து நல்ல வருமானத்தைப் பெறலாம்.

15. 1) கொக்கோ செய்கை இலங்கையில் மிகக் குறைந்தளவில் நடைபெறு கின்றது.
2) கொக்கோ செய்கை இலங்கைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதன்று.
3) எல்லோரும் கொக்கோவை விரும்புவர்.
4) கொக்கோ பெரும்பாலும் சொக்களேற்று உற்பத்தியில் பயன்படுத்தப்படுகின்றது.

16. 1) கோப்பியில் கபீன் என்னும் இராசாயனப் பொருளுண்டு.
2) கோப்பிச் செய்கை இலங்கையில் குறைந்தளவு நடைபெறுகின்றது.
3) கோப்பிச் செய்கை இலங்கையில் ஆதிகாலத்திலிருந்து நடைபெற்று வருகின்றது.
4) கோப்பிச் செடியை ஒவ்வொரு வீட்டிலும் வளர்த்தால் அது நன்மை பயக்கும்.

**17 தொடக்கம் 22 வரையான வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப் படையாகக் கொண்டவை.**

பமிலா, நிமலா, விமலா, அமலா ஆகியோர் நான்கு சினேகிதிகள். இவர்க ளிடம் எட்டு செல்லப்பிராணிகள் உள்ளன. இவற்றில் நாய்கள் 3, பூனைகள் 3, கிளிகள் 2. இவை பம்மி, நிம்மி, விம்மி, அம்மி என்னும் பெயர்களினால் அழைக்கப்படுகின்றன. இருவகைப் பிராணிகள் ஒரேபெயரினால் அழைக் கப்படுகின்றன. அவற்றின் பெயர்கள் உடைமையாளரின் பெயரின் முதலெ ழுத்துத் தவிர்ந்த ஏனையோரின் பெயர்களின் முதலெழுத்துக்களுடன் ஆரம் பிக்கின்றன. ஒவ்வொருவருக்கும் இவ்விரண்டு செல்லப்பிராணிகள் உள்ளன.

பிராணிகளுக்குப் பெயரிடும்போது பின்வரும் விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

பமிலாவின் செல்லப் பிராணி நிம்மியன்று
நிமலாவின் செல்லப் பிராணி அம்மியன்று
விமலாவின் செல்லப் பிராணி பம்மியன்று
அமலாவின் செல்லப் பிராணி கிளியன்று
நிமலாவிடம் நாய் இருக்கவில்லை.
எந்த நாய்க்கும் அம்மியெனப் பெயரிடப்படவில்லை.
எந்தப் பூனைக்கும் பம்மியெனப் பெயரிடப்படவில்லை.

17. நிமலாவிடம் இருந்த இருவகை செல்லப் பிராணிகளும் எவை?

18. அமலாவிடம் இருந்த இருவகை செல்லப்பிராணிகளும் எவை?

19. பமிலாவின் செல்லப் பிராணிகளின் பெயர்கள் யாவை?

20. எந்தப் பிராணிகள் நிம்மி எனும் பெயரினால் அழைக்கப்பட்டன?

21. பம்மி, நிம்மி எனும் பெயர்களைக் கொண்ட செல்லப் பிராணிகள் எவரிடம் உள்ளன?

22. நிம்மி, அம்மி என்னும் பெயர்களைக் கொண்ட இரு செல்லப் பிராணிகளும் எவரிடம் உள்ளன?

**23--26 வரை கீறிட்ட இடங்களில் பொருத்தமான எண்ணை எழுதுக.**


23. 195 (22) 322 ஆயின் 325 ....... 234

24. 80 70 50 10 .......

25. 3 6 11 ........ 27

26. 18 10 6 4 ........

27. தொடக்கம் 30 வரையான ? அடையாளம் இடப்பட்ட இடத்தில் வர வேண்டிய எண் யாது?

27. 


28.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | 18 | 4 | 7 | 12 | 12 | 19 | 84 | 11 | 21 | ? |

///////////////////////////////////////////////////////////////////////////////

29.

| | |
|---|---|
| 16 | |
| 4 | 2 |

| | |
|---|---|
| 40 | |
| 5 | 4 |

| | |
|---|---|
| ? | |
| 7 | 6 |

| | |
|---|---|
| 126 | |
| 9 | 7 |

30.

| | |
|---|---|
| 34 | 39 |
| 13 | 17 |

| | |
|---|---|
| 56 | 87 |
| 29 | 28 |

| | |
|---|---|
| 174 | ? |
| 13 | 87 |

| | |
|---|---|
| 114 | 96 |
| 32 | 57 |

## நுண்ணறிவு வினாக்களுக்கான விடைகள்

01. (4)
02. (3)
03. (2)
04. (2)
05. (3)
06. (3)
07. (1)
08. (4)
09. (3)
10. (3)
11. (1)
12. (3)
13. (3)
14. (4)
15. (3)
16. (4)
17. பூனை, கிளி
18. நாய், பூனை
19. விம்மி, அம்மி
20. நாய், பூனை
21. அமலா
22. விமலா
23. 19
24. -70
25. 18
26. 3
27. 24
28. 78
29. 84
30. 78



விரைவில் நடைபெறவுள்ள கிராம அலுவலர் போட்டிப் பரீட்சை (03.09.2016), வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் (சமுர்த்தி) போட்டிப் பரீட்சை போன்றவற்றை முன்னிட்டு வீசப்பட்ட வலையின் விசேட வெளியீடு வெளிவந்து விற்பனையாகிறது...



விலை : 300/- மட்டுமே

வாங்கிப் படியுங்கள், வித்தியாசத்தை உணர்வீர்கள்...

விலை : 350/- மட்டுமே

யாழ்.நகரில் பூபாலசிங்கம் புத்தகசாலையில் பெற்றுக்கொள்ள முடியும்

### உங்கள் பார்வையில் வலை...

வலை குறித்து உங்களது கருத்துக்களை எழுதி, Passport அளவு புகைப்படத்தினையும் இணைத்து அனுப்புங்கள். அவை காலக்கிரமத்தில் வலையில் பிரசுரிக்கப்படும்.


## ❒ ஒரு கிராமத்திற்கு ஒரு மில்லியன் அபிவிருத்தித் திட்டம்



- இத்திட்டமானது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையின் கீழ், பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்காவின் ஆலோசனையின் பிரகாரம், தேசிய கொள்கைள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேராவின் மேற்பார்வையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
- தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் கீழ் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிற்கும் தலா 10 இலட்சம் வீதம் ரூபா 13, 300 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் மூலம் 25 வீதம் மக்களின் பங்களிப்பும் பெறப்படவுள்ளது.
- இந்நிதியின் மூலம் கிராமியப் பொருளாதாரத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக கிராமிய வீதிகள், பாலங்கள் அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் பொதுமக்களின் பாவனையை அடிப் படையாகக் கொண்ட நீர் தொடர்பான திட்டங்கள், பொதுக்கிணறுகள், விவசாயபாசனக் கிணறுகள், மின்சார விநியோகம், நீர்ப்பாசனத் திட்டங்கள், கிராமியச் சந்தைகள் மற்றும் மீன் சந்தைகள் என்பவற்றை உள்ளடக்கிய தாக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் இணையத்தளம் : Mnpea.gov.lk

---



## மாணவியின் பார்வையில்...

போட்டி உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் தான் வாழுகின்ற உலகில் தான் சந்திக்கின்ற விடயங்கள் அனைத்தையும் போட்டியிட்டே தனது இருப்பை தக்க வைத்துக்கொள்ள வேண்டிய சூழலில் வாழ்கிறான்.

இப்போட்டியை வெற்றிகொள்வதற்கு தேடலுடன் கூடிய தர்க்கமான நுண்ணறிவு மற்றும் பொது அறிவு மிக அவசியம். இவ்வலையானது தேடுதல் இல்லாத நம்மவர்களின் அறிவுப் பசியைப் போக்குவதில் "வலை" மிகவும் துணைநிற்கின்றது.

உயர்தரப் பரீட்சையை எடுத்துக் கொண்டால் என்ன? அதன் பின்னர் நாம் எதிர்கொள்ளும் அரச வேலைவாய்ப்பு போட்டிப் பரீட்சைகளை எடுத்துக்கொண்டால் என்ன? அங்கெல்லாம் பொது அறிவு, நுண்ணறிவு பரீட்சைகளை எதிர்கொள்வதற்கு வலை கைகொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. வாழ்க வலை... வளர்க அதன் பணி...

லக்ஷிகா நவரட்ணம்,
A/L 2016 (கலைப்பிரிவு)
யா/யாழ்ற்ரன் கல்லூரி,
காரைநகர்.



தொடர்புக்கு : சி.என்.எச்.சாள்ஸ், 163 செம்மணி வீதி, நல்லூர். தொ.இல : 0776913337
heyncharles@gmail.com